DR. H. V. HANDE : Sir, in view of the fact that this is a very old hostel—it was formerly the Madras Medical College Hostel and afterwards it became the hostel of the Law College and also that there is not enough accommodation—the Hon. Minister himself said that there was not sufficient accommodation and that it will take a long time to complete the work—may I know whether any temporary arrangements would be made to see that all students applying for accommodation in the hostel—now so many are rejected for want of accommodation—are provided with at least such temporary accommodation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *அந்த இடத்தைத் தவிர வேறு வசதி இல்லை என்ற காரணத்தினால் அந்த இடத்தில் புதிய கட்டடத்தையும் கட்டலாம் என்ற அளவில் அந்த இடத்தை வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பிராட்வேயிலும் வேறு கட்டிடம் இருக்கிறது. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு வேண்டிய விடுதி வசதி நல்லமுறையில் சீக்கிரத்திலேயே அமைத்துக் கொடுக்கப்படும்.*

Water supply in South Madras area

* 529. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Corporation of Madras had taken steps to increase the pressure of water supply to Kodambakkam, T. Nagar, West Mambalam, Saidapet, Guindy and Adyar by constructing a pump house at T. Nagar in Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ) ஆம்.*

(ஆ) சென்னை மாநகராட்சியின் தெற்குப் பகுதிகளில் தண்ணீர் விநியோகத்தைச் சீர்திருத்த தியாகராயநகரில் எழுபத்தெட்டு இலட்ச ரூபாய் செலவில் நீரைத் தேக்கி விரைவாக செலுத்த தனியாக ஒரு நிலையம் கட்டப்படுகிறது. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து வடிகட்டிய நீர் பூமிக்கடியிலுள்ள தேக்கங்களுக்கு செலுத்தப்பட்டு, பின்பு ஒரு மேல்மட்ட தேக்கத்தின் வழியாக பல பகுதிகளுக்கு செல்லும் பெரிய குழாய்களுக்குச் செலுத்தப்படும்.

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister when this is likely to be completed? May I also know whether the Government is aware of the fact that it is only a partially completed one now, it is very unhygenic and if it is allowed to

1972 மார்ச் 17]

function in its present condition it will lead to diseases like jaundice, etc., for, there is lot of dirt in the water and whether it is possible, firstly to keep it clean right now and secondly, to expedite the whole completion of the work and when they expect it to be completed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 78 லட்சம் செலவில் இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலத்திற்கு அடியில் 53 லட்சம் காலன் பிடிக்கக் கூடிய தொட்டியும், 80 அடி உயரத்தில் நீர்தேக்கத் தொட்டியும் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. 42 முக்கியமான பெருங்குழாய்கள் எல்லாம் புதைக்கப்பட்டுவிட்டன. துணைக் குழாய்களும் புதைக்கப்பட்டு வருகின்றன. பம்பிங் ஸ்டேஷன் அமைக்கின்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வேகமாகத்தான் அந்த வேலை நடைபெற்று வருகிறது.

DR. H. V. HANDE : I want to know when it will be over.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. மாநகராட்சி விரைவில் அதை முடித்துவிடும் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதைப் பாராட்டுகிறோம் என்றாலும் அடையார் பகுதியில் தண்ணீரே வருவதில்லை. இன்னும் சில இடங்களில் குழாயைத் திறந்து துணி தோய்க்கிற காரணத்தினால் தண்ணீர் பொல்யூட் ஆகிறது. அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. மாநகராட்சியின் மூலமாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it not a fact that this is an over-head work, foundation for which was laid in 1965 and an underground tank is also constructed? What is the reason for the delay in construction of the over-head tank? Is it because of the dispute about cubic content of the water supply and if so has it been finalised? I am sure the Government cannot complete the work without deciding on the cubic content.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழுவிவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. காலதாமதமானதற்கான காரணத்திற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

'Erection of pumpsets would be completed by the middle of 1972' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.